# 19-04-2024 செய்தி

## தேர்தல் ஆணையத்தின் சேவை செயலிகள்....

**சக்ஷம் செயலி:**

- மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்காக பிரத்யேகமாக உள் கட்டமைக்கப்பட்ட வசதிகள்.
- மாற்றுத்திறனாளி வாக்காளராகப் பதிவு செய்வதற்கும் புதிதாக விண்ணப்பிப்பதற்கும்.
- வாக்குச்சாவடி மையத்தில் சக்கர நாற்காலிக்காக விண்ணப்பிக்கலாம்.

**வாக்காளர் உதவி மைய செயலி**

- வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு மற்றும் அதுதொடர்புடைய வசதிகளைப் பெறுவதற்கான ஒற்றைச் சாளர சேவை.
- வாக்காளர் பட்டியலில் உங்களின் பெயரை தேடுவதற்கு.
- வாக்காளர் பட்டியலில் புதிதாக இணைவதற்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.
- வாக்குச்சாவடி தகவல் சீட்டை பெறுவதற்கு.

**கேஒய்சி செயலி:**

- உங்கள் தொகுதியில் போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளரின் வேட்புமனுவில் தெரிவித்துள்ள தகவல்களான கல்வித் தகுதி, குற்றப் பின்னணி, சொத்துகள் மற்றும் கடன்கள் குறித்து அறிந்து கொள்ளலாம்.

**சி-விஜில் செயலி:**

- தேர்தல் அறிவிக்கப்படும் நாளில் இருந்து செயல்பாட்டிற்கு வரும் இந்தச் செயலி, தேர்தல் தொடர்பான சட்டவிரோதமான செயல்கள்/தேர்தல் நடத்தை விதிமீறல் குறித்து புகாரளிப்பதற்காகும்.

## பாக் ஜலசந்தியில் குறையும் பவளப்பாறைகள்

- வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக, பாக்ஜலசந்தி உள்ளிட்ட பகுதிகளில் பவளப் பாறைகளின் பரவல் படிப்படியாக குறைந்து வருவது, தேசிய கடலோர ஆய்வு மைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- கடலோரப் பகுதிகளில் ஆழமான இடங்களில் பவளப்பாறைகள் காணப்படும். இறந்த கடல் உயிரினங்களுக்கு உடல் மற்றும் எச்சங்கள் பல்வேறு மாற்றங்களுக்கு பின் படிந்து, பவளப்பாறைகள் எனப்படும் பாசியினங்கள் உருவாவதாகக் கூறப்படுகிறது.

**பல வண்ணம்**

- கடலோரப் பகுதிகளில் பவளப் பாறைகள் இருக்கும் இடங்களில் மீன் வளம் அதிகரிக்கும் மற்றும் பேரிடர் காலங்களில் பாதிப்புகள் கட்டுப்படுத்தப்படும்.
- இதனால், கடலில் பவளப் பாறைகளை பாதுகாக்க வேண்டும் என, மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.
- தமிழக கடலோரப் பகுதிகளில் மன்னார் வளைகுடா, பாக் ஜலசந்தி உள்ளிட்ட பகுதிகளில், 1.10 சதுர கி.மீ., பவளப் பாறைகள் இருந்ததாக மதிப்பிடப்பட்டது.
- பாக் ஜலசந்தி பகுதியில் பவளப்பாறைகள் பரவல் விகிதம்

| ஆண்டு | சதவீதம் |
|---|---|
| 2002 | 37.6 |
| 2008 | 37.8 |
| 2013 | 28.24 |
| 2016 | 31.1 |
| 2023 | 30.82 |

**வெப்பம் அதிகரிப்பு**

- காலநிலை மாற்றம் உள்ளிட்ட காரணங்களால், கடல் நீரில் வெப்பநிலை அதிகரிப்பதால், பவளப்பாறைகள் அழியும் நிலை ஏற்பட்டுள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

## தேர்தல்.. நம் புராதன பெருமை

- தேர்தல் நமக்கு புதிது அல்ல. பண்டைய தமிழகத்தில் மன்னர்கள், வாரிசு அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டாலும், கிராமங்களை ஆளும் முக்கிய பதவிகளுக்கு தேர்தல் முறையிலேயே நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- அதற்கு கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன. தேர்தல் என்ற நடைமுறையை உலகம் அறிந்திராத காலகட்டத்தில், அதாவது, சுமார் 1,100 ஆண்டுகளுக்கு முன்பு குடவோலை முறை இங்கு அமலில் இருந்ததற்கான சாட்சியாக நிற்கிறது காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் வைகுண்ட பெருமாள் கோயிலில் உள்ள கல்வெட்டு, கி.பி. 920-ம் ஆண்டு முதலாம் பராந்தக சோழர்களின் ஆட்சியில் குடவோலை முறையில் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- தேர்தலில் பங்கேற்போருக்கான (வேட்பாளர்) தகுதிகள், தகுதியற்றவர்கள் யார் என்பது குறித்து இதில் வரையறை செய்யப்பட்டுள்ளது.
- ஊர் சபை உறுப்பினர் தேர்வு தொடர்பாக திருநெல்வேலி மாவட்டம் மானூரில் உள்ள கல்வெட்டு இதைவிட பழமையானது என்று கூறப்படுகிறது.